# சிவகங்கை நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

2019ம் ஆண்டு மார்ச் 29ம் நாள் விளம்பி வருடம் பங்குனி 15ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# பொருள்கள்

1. சிவகஙகை நகராட்சி ஆணையாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.. 386

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

2. சிவகஙகை நகராட்சி பொறியாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.. 387

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை பார்வையிட மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 11.01.2019 அன்று சிவகஙகைக்கு வரப்பெற்றதால் இந்நகர் பகுதியான பேருந்து நிலையம் , முக்கிய சாலைகள் மற்றம் பொதுக்கழிப்பிடஙகளில் உள்ள சுவகர்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு சுவர் விளம்பரஙகளை எழுதவும், Flex Board மற்றும் தூய்மை இந்தியா விழிப்புணர்வு தொப்பிகள் 10 எண்ணஙகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.49500/–ற்குமதிப்பீட்டு பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் தனது 28.02.2019 ம் தேதிய 381ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது. மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஜி.கார்த்திகேயன், எஸ்கே ஸ்டுடியோ அன் அட்வர்டைஸ்மெண்ட், சிவகஙகை | ரூ.45250/– |
| 2. | திரு.மாயா ஸ்டுடியோ, சிவகஙகை | ரூ.47800/– |
| 3. | இந்தியன் எண்டர்டைமெண்ட் , சிவகஙகை | ரூ.49700/– |

**அலுவலகக்குறிப்பு:–**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.ஜி.கார்த்திகேயன், எஸ்கே ஸ்டுடியோ அன் அட்வர்டைஸ்மெண்ட், சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 388

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016ன் படி சிவகஙகை நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் பற்றிய விவரஙகளை பொதுமக்களுக்கும் மற்றும் வணிக நிறுவனஙகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த 5000 எண்ணிக்கையிலான துண்டு பிரசுரஙகள் ( Bit-Notice ) அச்சிட்டு விநியோகம் செய்வதற்கு தொகை ரூ.17000/—ற்கு மதிப்பீட்டு பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் தனது 28.02.2019 ம் தேதிய 382ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது. மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஜி.கார்த்திகேயன், எஸ்கே ஸ்டுடியோ அன் அட்வர்டைஸ்மெண்ட், சிவகஙகை | ரூ.16500/— |
| 2. | திரு.மாயா ஸ்டுடியோ, சிவகஙகை | ரூ.17750/— |
| 3. | இந்தியன் எண்டர்டைமெண்ட் , சிவகஙகை | ரூ.19250/— |

<u>**அலுவலகக்குறிப்பு:—**</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.ஜி.கார்த்திகேயன், எஸ்கே ஸ்டுடியோ அன் அட்வர்டைஸ்மெண்ட், சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 389

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

5. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான 1 முதல் 27 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகள், வணிக நிறுவனஙகள் மற்றும் அரசு அலுவலக வளாகஙகளில் டெஙகு நோய்த்தடுப்பு களப்பணிகள் மேற்கொள்ள தேவையான வருடாந்திர காலண்டர் மற்றும் smile Sticker ஆகியவைகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.52000/—ற்கு மதிப்பீட்டு பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் தனது 28.02.2019 ம் தேதிய 380ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது. மேற்காணும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | வீனஸ் ஆப்செட் பிரிண்டிர்ஸ், சிவகஙகை | ரூ.49300/— |
| 2. | ஐஸ்வர்யா ஆப்செட், சிவகஙகை | ரூ.57800/— |
| 3. | ஆத்மா ஆப்செட் , சிவகஙகை | ரூ.56100/— |

<u>**அலுவலகக்குறிப்பு:—**</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள வீனஸ் ஆப்செட் பிரிண்டிர்ஸ், சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 390

தீர்மானம்.. அனுமதிக்கப்பட்டது.

6. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகளின் உத்தரவு ந.க.எண்..2288/2019/பி3, நாள்..26.03.2019 ன் படி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016 பிரிவு எண்..15ன் படி சிவகஙகை நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகள் வகுக்கப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிட கோரி அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகளை மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:–**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சிவகஙகை நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்..29.03.2019ன் படி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகளை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 391

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

7. <u>2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்.</u>

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28யு) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல (Transport), விற்பனை செய்தல் (ளுயடநள) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சி பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.

   (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

   (iii) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

   (iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**: இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை, இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot Fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

<u>2. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு</u>

(i) மொத்தமாக (Whole Sale) – சேமித்தல் ∴ வழங்குதல் ∴ கொண்டு செல்லுதல் ∴ விற்பனை செய்தல் ∴ பகிர்ந்தளித்தல்

(ii) வணிக வளாகங்கள், துணிக்கடைகள், பல்பொருள் அங்காடிகள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள் மதுபானக்கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளிக்கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

(iii) மளிகைக் கடைகள், மருந்துக்கடைகள்,பழக்கடைகள். காய்கறி கடைகள். இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்.

(iv) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் ∴ எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

4. அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை ∴ நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் ∴ இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் ∴ மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ∴ பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மேல் முறையீட்டு உரிமை:**

சிவகங்கை நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் சிவகங்கை நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**6. தண்டனைகள் விபரம்:**

**அட்டவணை II**

**பிரிவு 306(28-யு)ன் படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண் | குற்றங்கள் | முதன்முறையாக குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 10000 | 15000 | 20000 |
| iii | மளிகை கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 100 | 200 | 500 |

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 392

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

8. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகள், வணிக நிறுவனஙகள் மற்றும் அரசு அலுவலக வளாகஙகளில் டெஙகு நோய்த்தடுப்பு களப்பணிகள் மேற்கொள்ள தேவையான Smile Sticker ஆகியவை தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.46500/– மதிப்பீட்டு தொகைக்கும் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | வீனஸ் ஆப்செட் பிரிண்டிர்ஸ், சிவகஙகை | ரூ.45900/– |
| 2. | ஐஸ்வர்யா ஆப்செட், சிவகஙகை | ரூ.52700/– |
| 3. | ஆத்மா ஆப்செட் , சிவகஙகை | ரூ.51000/– |

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள வீனஸ் ஆப்செட் பிரிண்டிர்ஸ், சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 393

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

9. தமிழ்நாடு ஒருஙகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ள நிலையில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழஙக தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கடித ந.க.எண்..50977/2018/டிபி 3 நாள்..07.03.2019 கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. புதிய ஒருஙகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின்படி 01.04.2019 முதல் நகராட்சி நிர்வாக ஆணையரால் உருவாக்கப்படும் (Steering Committee) யில் சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு செய்ய வேண்டும்.

2. இதற்கான (Steering Committee) யில் கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்க உத்திரவிடப்படுகிறது.

| **உறுப்பினர்கள்** | **உறுப்பினர்கள் எண்ணிக்கை** |
|---|---|
| 1. ஆணையாளர் (நகராட்சி) | 1 |
| 2. பொறியாளர் (நகராட்சி ) நகரமைப்பு அலுவலர் பதவி இல்லததால் | 1 |
| 3. நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளதால் பொதுப் பணி மேற்பார்வையாளர் பணியுடன் கூடுதலாக ஆய்வாளர் (பொ) | 1 |

மூன்று உறுப்பினர்களை (Steering Committee) யில் உறுப்பினர்களாக கொண்டு கமிட்டி அமைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மன்றத்திற்கு வைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

1. பதிவு செய்ய கோரும் தொழில் சார்ந்த வல்லுனர்களுக்கான தகுதி பதிவு செய்யும் வழிமுறை அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு ஒருகிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் விதி 23 மற்றும் XIII குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும்.
2. தொழில் சார்ந்த வல்லுநர்களை பதிவு செய்யும் போது உரிய அடையாள அட்டை /ஆளறிச் சான்று,ஆதார் அட்டை மற்றும் புகைப்படத்துடன் பெற்று இணையதளம் வாயிலாக பதிவு செய்ய வேண்டும்.
3. பரிசோதனை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர் ரூ.5000/– (ஐந்தாயிரம் ) மட்டும் பதிவுக் கட்டணமாக செலுத்தி பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநர்களின் பதிவேடு பராமரித்து, விபரப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் புதுநிலைப்படுத்தி ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்கு வைக்க வேண்டும், மற்றும் அலுவல் சார்ந்த வலைதளத்தில் பதிவிட வேண்டும்.
4. பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநர்களை தவறு செய்யும் நிலையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி அவர்களின் பதிவினை ரத்து செய்து அதன் விபரத்தை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதோடு நகராட்சி அலுவலக வலைதளத்திலும் பதிவிட வேண்டும்.

**அலுவலக்குறிப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை சுற்றறிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் (steering committee) உறுப்பினர்களாக நகராட்சி ஆணயாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் (பொ) ஆகியோரை கொண்டு கமிட்டி உருவாக்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

தீர்மான எண்.. 394

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

10. இயக்குநர் நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அலுவலக கடித ந.க.எண்..848/2018/எ2 நாள்..28.02.2019ன் படி, 2018–2019ம் ஆண்டிற்கு சிவகங்கை நகராட்சி பங்குத் தொகை ரூ.50,000/– செலுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 395

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி